***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT***
***Mannargudi***
***CC.No.85/2024 – P.W. 4(LW2)***

| | |
|---|---|
| *Name* | வீரமணி |
| *Father/Husband's Name* | அன்பழகன் |
| *Village* | பெருகவாழ்ந்தான் |
| *Taluk* | முத்துப்பேட்டை |
| *Religion* | |
| *Age* | 22 |

***1ம் எதிரி ஆஜர் . 2ம் எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை***

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day* 24.06.2026

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பிரவீன், ஆஜர் எதிரி மற்றும் ஆஜரில்லா எதிரி பிரபாகரன் ஆகியோர்களை எனக்கு தெரியும். மேற்படி நபர்கள் அனைவரும் எனது ஊரைச்சேர்ந்தவர்கள் ஆவார்கள். கடந்த 04.03.2024-ம் தேதியன்று இரவு சுமார் 08.00 மணியளவில் எங்கள் தெருவில் விக்னேஷ் வீட்டு கொல்லை அருகே நானும், பிரவீன், வினோத், விஜய் ஆகியோர்கள் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது அந்த வழியாக வந்த பிரபாகரன் என்பவரை பிரவீன் அண்ணன் என்று கூப்பிட்டார். அதற்கு பிரபாகரன் கோபப்பட்டு பிரவீனை தேவடியாக பயலே என்று திட்டினார். அருகிலிருந்த நாங்கள் சாமாதானம் செய்து அனுப்பி வைத்துவிட்டோம். நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். அதன்பிறகு நான் எனது வீட்டிலிருந்தபோது இரவு சுமார் 10.30 மணியளவில் சத்தம் கேட்டது. நான் சென்று பார்த்தபோது பிரவீன் என்பவருக்கு தலையிலும், கையிலும் ரத்தமாக இருந்தது. அருகில் ஆஜர் எதிரிகள் கையில் கம்பி மற்றும் கட்டையுடன் இருந்தார்கள். பின்னர் காயம்பட்ட பிரவீனை நானும், அஜித் என்பவரும் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு முதலுதவி சிகிச்சையளித்தார்கள். பின்னர் மேல்சிகிச்சைக்காக திருவாரூர் அரசு

மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ........இல்லை.</u>**

(ஒம்/-) ஜெ.தமிழ்முருகன்.24.06.2026

நீதித்துறை நடுவர் எண். 2, (மு.கூ.பொ)

மன்னார்குடி.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No.85/2024 – P.W. 5 (LW-7)***

| | |
|---|---|
| *Name* | திரிஷா |
| *Father/Husband's Name* | பிரபாகரன் |
| *Village* | பெருகவாழ்ந்தான் |
| *Taluk* | *முத்துப்பேட்டை* |
| *Religion* | |
| *Age* | *26* |

***1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை.*** **மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day* 24.06.2026

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். சாட்சி பிரகாஷ் என்பவரை தெரியும். ராமச்சந்திரன் மகன் பிரவீன் என்பவரை தெரியும். அவருக்கு தான் அடிபட்டுவிட்டது. ஆஜர் எதிரி எனது மாமனார் ஆவார். எதிரி பிரபாகரன் எனது கணவர் ஆவார். என்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வைமகசரிலுள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 2024-ம் ஆண்டு தேதி, மாதம் ஞாபகமில்லை. ஒருநாள் காலை பிரவீன் வீட்டின் அருகில் நின்றுக்கொண்டிருந்தபோது, போலிசார் பிரவீனுக்கும் எதிரிகளுக்கும் ஏற்பட்ட தகராறில் பிரவீனுக்கு காயம் ஏற்பட்டதால் போலிசார் அங்கு விசாரித்து வரைபடம் வரைந்தார்கள். சாட்சிகளாக எங்களிடம் கையொப்பம் கேட்டார்கள். அதில் நானும் பிரகாஷம் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். (**பார்வைமகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ... இல்லை

(ஒம்/-) ஜெ.தமிழ்முருகன்.24.06.2026
நீதித்துறை நடுவர் எண். 2, (மு.கூ.பொ)
மன்னார்குடி.